Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 17, 2025

வெள்ளிக்கிழமை, 17 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 139 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக

## துப்பாக்கிச் சூடு: இருவர் பலி; இருவர் படுகாயம்

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக, வியாழக்கிழமை (16) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வருகைதந்தவர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



சீன முதலீட்டார்களே இலங்கையில்

# "முதலீடு செய்யுங்கள்"

■ சீனாவில் இருந்து ஜனாதிபதி அனுரகுமார அழைப்பு

நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு அமர்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## சினோபெக் ஒப்பந்தம்


ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இலங்கைக்கு கிடைத்த பாரிய முதலீட்டைக் குறிக்கும் வகையில் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின் சினோபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு வியாழக்கிழமை (16) காலை இடம்பெற்றுள்ளது.

இந்த 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ் ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 2 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய் தாங்கிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது தொடர்ச்சி P2



## "மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குங்கள்"

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2



## இறையாண்மைக்கு சீனா அர்ப்பணிப்புடன் உள்ளது

இலங்கையின் சுயாதீனத் தன்மை, ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக சீனா அர்ப்பணிப்புடன் உள்ளதென சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி (Zhao Leji) தெரிவித்துள்ளார்.

இதன்போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் சிநேகபூர்வமாக வரவேற்பளித்தார்.

மேலும், கருத்து தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறியுள்ளார். தொடர்ச்சி P2

அர்ச்சுனா இராமநாதனின் எம்.பி. பதவி விவகாரம்

## எதிர்த்து தாக்கல் செய்த மனுவுக்கு ஆட்சேபனைகளை செய்ய அனுமதி



பாராளுமன்ற உறுப்பினராக தான் தெரிவு செய்யப்பட்டதை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவிடுமாறு கோரிய மனுவிற்கு எதிராக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்யச் சந்தர்ப்பம் வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், கோரிக்கை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2



## மாணவியை கடத்திய மூவருக்கு விளக்கமறியல்

கம்பளை, தவுலகல பிரதேசத்தில் பாடசாலை மாணவி ஒருவரை வேனில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தவுலகல பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (11) பாடசாலை மாணவி ஒருவர் சக மாணவருடன் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த போது வலுக்கட்டாயமாக வேனில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

## கூட்டி, குப்பை வண்டியை தள்ளி யாழில் விழிப்புணர்வு போராட்டம்

பு.கஜிந்தன்



வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினையையும் கோரிக்கையையும் மக்கள் மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் யாழ். நகர்ப் பகுதியில் வியாழக்கிழமை(16) காலை 9.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## 'பொடி லெசி' மும்பாயில் கைது



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்டைய குழு உறுப்பினரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான 'பொடி லெசி' என்றழைக்கப்படும் ஜனித் மதுசங்க இந்தியாவின் மும்பையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

பதுளை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில்

## "66 % நிலப்பரப்பு ஆபத்தில் உள்ளது"

பதுளை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 66 சதவீத நிலப்பரப்பு ஏதோ ஒரு வகையான ஆபத்தில் உள்ளது என தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பதுளை மாவட்ட புவியியலாளர் ஹர்ஷனி பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தின் தற்போதைய உணவு நிலைமை குறித்து பெருந்தோட்ட மற்றும் பொது உள்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தலைமையில் பதுளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(15) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பதுளை மாவட்டத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இன்னும் மீள் குடியேற்றப்படவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

காலநிலை மாற்றத்தால் இலங்கை மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகிறது, உலகளாவிய அதிக ஆபத்துள்ள நாடாகவும் மாறிவருகிறது. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# துப்பாக்கிச் சூடு: இருவர் பலி; இருவர் படுகாயம்

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் உட்பட மூன்று ஆண்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதன் போது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் வயது-(61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது 42) என தெரிய வந்துள்ளது. படுகாயம் அடைந்த மற்றைய ஆண், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும்,காயமடைந்த ஆண் ஒருவரும் மன்னார் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (16) இடம் பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் - நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டை படுகொலையைத் தொடர்ந்து, நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில், வழக்கு விசாரணைக்கு வந்த இவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# “முதலீடு செய்யுங்கள்”

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் விஜயத்தின் மூன்றாம் நாளுடன் இணைந்ததாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீனா டியான்யிங் இன்கோபரேசன் (CNTY- China Tianying Inc), சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம் (China Harbour Engineering Company Ltd), சீன தொலைத் தொடர்பு நிர்மாண கம்பெனி லிமிடெட் (China Communications Construction Company Ltd), சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation- SINOPEC Group), மெடலர்ஜிகல் கோபரேசன் ஒப் சைனா நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd), சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (China Civil Engineering Construction Corporation), சீனா எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் (China Energy International Group Company Ltd), குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் (The Guangzhou Public Transport Group) உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றுள்ளன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதர் மஜிந்த ஜெயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

# சினோபெக் ஒப்பந்தம்

சீனாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த இந்த புதிய முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன், ஹம்பாந்தோட்டையின் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்தும். அத்துடன் முழு இலங்கை மக்களுக்கும் இதன் பலன் மிக விரைவில் கிடைக்கப்பெறும்.

இந்த நிகழ்வில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

# “மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குங்கள்”

இச்சந்திப்பின்போது, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இருவரும் நீண்டநேரம் கலந்துரையாடியுள்ளனர்.

அண்டைய நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் சஜித் பிரேமதாச நன்றி தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான ஆதரவைத் தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறையாண்மைக்கு சீனா அர்ப்பணிப்புடன் உள்ளது

இதன்போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் சிநேகபூர்வமாக வரவேற்பளித்துள்ளார்.

மேலும், கருத்து தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறியுள்ளார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்த்து தாக்கல் செய்த மனுவுக்கு ஆட்சேபனைகளை செய்ய அனுமதி

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், மேன்முறையீட்டு நீதிமன்றில் தனது சட்டத்தரணிகள் ஊடாக இந்தக் கோரிக்கையைப் புதன்கிழமை (15) முன்வைத்துள்ளார்.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதை செல்லுபடியற்றதாக்குமாறு கோரி சமூக ஆர்வலரும் அபிநவ நிவாஹல் பெரமுனவின் தலைவருமான ஓஷல ஹேரத்தினால் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் தான் வகித்த அரசாங்க வைத்தியர் பதவியை இராஜினாமா செய்யாமல் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தை மீறியதாகவும் அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் எனவும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. முன்வைத்த கோரிக்கையைப் பரிசீலித்த நீதியரசர், அமர்வு உரிய முறையில் நியமிக்கப்படாததால் வெள்ளிக்கிழமை (17) இந்தக் கோரிக்கையை முன்வைக்குமாறு அவருக்கு அறிவித்துள்ளார்.

அதன்பிறகு, மனு மீதான விசாரணையை 2025 ஜனவரி 31ஆம் திகதிக்கு நீதியரசர் ஒத்திவைத்துள்ளார்.

# மாணவியை கடத்திய மூவருக்கு விளக்கமறியல்

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்,பிரதான சந்தேக நபர், கடத்திச் செல்லப்பட்ட மாணவியுடன், அம்பாறை நகரத்தில் வைத்து கடந்த 13ஆம் திகதி, கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கடத்திச் செல்லப்பட்ட மாணவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மாணவியை கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட வேன் மற்றும் வேனின் சாரதி கடந்த 14ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பிரதான சந்தேக நபரின் நண்பனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# கூட்டி, குப்பை வண்டியை தள்ளி யாழில் விழிப்புணர்வு போராட்டம்

வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளவுள்ள இந்த விழிப்புணர்வு செயற்திட்டத்தில் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துக்களை உள்வாங்கல், போன்ற நிகழ்வுகளை வேலையில்லா பட்டதாரிகளின் கோரிக்கைக்கு வலுசேர்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவு தூபி முன்றலில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து யாழ். நகர்ப் பகுதிக்குள் பேரணி இடம்பெற்றதுடன், பட்டம் பெற்று விட்டு தாங்களும் சாதாரண வேலைகளைத்தான் செய்கின்றனர் என்பதை எடுத்துக் காட்டும் முகமாக வீதியைக் கூட்டுதல், குப்பை




வண்டியைத் தள்ளுதல் போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

தமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மயப்படுத்தி தமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள வலுசேர்க்கும் நோக்குடன் இச்செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

# ‘பொடி லெசி’ மும்பாயில் கைது

பிணை நிபந்தனையை மீறி, இந்தியாவுக்கு தப்பிச் சென்ற இவரை, கைது செய்வதற்கான நடவடிக்கைகளை இந்திய பொலிஸாருடன் இணைந்து இலங்கை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட பொடி லெசியை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது,

தடுப்புக் காவலில் இருந்த ‘பொடி லெசி’ 2024ஆம் ஆண்டு டிசெம்பர் 9, அன்று பலபிட்டிய மேல் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அத்துடன், சந்தேக நபருக்கு அடுத்த வழக்கு திகதி வரை பயணத் தடையையும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தது.





இருப்பினும், ‘பொடி லெசி’ தனது பிணை நிபந்தனைகளை மீறி நாட்டை விட்டு தப்பிச் சென்றார். அவர் இந்தியாவில் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும், சந்தேக நபரைக் கைது செய்ய இந்திய அதிகாரிகளிடம் உதவி கோரினார். அதனடிப்படையிலேயே ‘பொடி லெசி’ கைது செய்யப்பட்டுள்ளார்.

# “66 % நிலப்பரப்பு ஆபத்தில் உள்ளது”

பதுளை மாவட்டத்தில் அதிகரித்து வரும் நிலச்சரிவுகள், கடுமையான மண் அரிப்பு, குடிநீர் பற்றாக்குறை, அதிகரித்து வரும் தொற்றுநோய்கள், உள்கட்டமைப்பு அழிவு மற்றும் பதுலு ஓயா அழிவைச் சந்தித்து வருகிறது. இதனால் ஆண்டுதோறும் அழிக்கப்படும் மக்கள் மற்றும் சொத்துக்களின் எண்ணிக்கை மிகப்பெரியது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பேரிடர்களின் தாக்கத்தைக் குறைக்க, காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிப்பது, ஆபத்து உணர்திறன் கொண்ட மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்துவது, காட்டுத் தீயைக் குறைக்கக் கூட்டாக அணிதிரள்வது, சட்டவிரோத அகழ்வாராய்ச்சி, போக்குவரத்து மற்றும் அகற்றலைத் தடுப்பது மற்றும் நீர்நிலைப் பகுதிகளின் பாதுகாப்பு மற்றும் மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்துவது அவசியம். நிலப் பயன்பாட்டைச் சீரமைக்கவும், அந்த நோக்கத்திற்காகவும் இங்கு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.









# ஜனாதிபதி சீன முதலீட்டாளர்களை சந்தித்தார்

நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு அமர்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு நான்குநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் விஜயத்தின் மூன்றாம் நாளுடன் இணைந்ததாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீனா டியான்யிங் இன்கோபரேசன் (CNTY- China Tianying Inc), சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம் ( China Harbour Engineering Company Ltd) , சீன தொலைத் தொடர்பு நிர்மாண கம்பெனி லிமிடெட் (China Communications Construction Company Ltd), சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation-SINOPEC Group), மெடலர்ஜிகல் கோபரேசன் ஒப் சைனா நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd), சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம் (China Civil Engineering Construction Corporation), சீனா எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் (China Energy International Group Company Ltd), குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் (The Guangzhou Public Transport Group) உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளர்.

இந்த நிகழ்வில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதர் மஜிந்த ஜெயசிங்க ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.





### மின்சாரம் தடைபட்டதால்

# “தடுப்பூசிகளுக்கு பாதிப்பு இல்லை”

**க.அகரன்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமையினால் அங்கு வைக்கப்பட்டிருந்த தடுப்பூசிகள் பாதிக்கப்படுமா என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டு ஊடகங்களில் செய்தி வெளி வந்திருந்தது.

இந் நிலையில், சிறிது நேரமே மின்சாரம் தடைப்பட்டமையினால் குறித்த தடுப்பூசிகளைப் பாதுகாக்கக் கூடிய வசதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ளமையினால் தடுப்பூசிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சாரம் புதன்கிழமை (15) துண்டிக்கப்பட்டதாகவும் நீண்ட நேரமாகியும் மின்சாரம் இணைக்கப்படாமையினால் அங்கு குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டிய தடுப்பூசிகளுக்குப் பாதிப்பு ஏற்படுமா என்கின்ற சந்தேகம் நிலவி வருகின்றது.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் செய்திகளும்



வெளிவந்திருந்த சந்தர்ப்பத்தில் இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடம் உள்ள குளிரூட்டிகள் 24 மணித்தியாலம் மின்சாரம் தடைப்பட்டாலும் கூட பாதுகாக்கக் கூடிய வசதி கொண்டவையாகக் காணப்படுகின்றது. எனவே இங்குள்ள தடுப்பூசிகள் எந்த விதத்திலும் பழுதடைவதற்குச் சந்தர்ப்பமில்லை என அவர் தெரிவித்திருந்ததுடன் பொதுமக்கள் எவ்வித ஐயமும் இன்றி குறித்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



## மல்வத்து ஓயாவில் வெள்ள அபாயம்

மல்வத்து ஓயா ஆற்றுப் படுகைக்கான வெள்ள அபாய எச்சரிக்கையானது வெள்ளிக்கிழமை (17) பிற்பகல் 1 மணி வரை அமுலில் இருக்கும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களும், குறுக்கு வீதிகளில் பயணிப்பவர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

## இம்மாத இறுதிக்குள் இழப்பீட்டுத் தொகை

கடந்த 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான சேத மதிப்பீடுகள் நிறைவடைந்த மாவட்டங்களில் தற்போது இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படுவதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இந்த மாத இறுதிக்குள் அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் பொலன்னறுவை, ஆகிய மாவட்டங்களுக்கான இழப்பீடுகளை வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.



மட்டக்களப்பு மற்றும் பிற மாவட்டங்களுக்கான இழப்பீடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் வழங்கத் திட்டமிட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

## பழுதடைந்த நிலையில் PHI இன் சடலம் மீட்பு

**ரீ.எல்.ஜவ்பர்கான்**

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி கலைமகள் வீதியிலுள்ள பூட்டப்பட்டிருந்த வீட்டிலிருந்து அழுகிய நிலையில், ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் பொதுச் சுகாதார பரிசோதகர் (Public Health Inspector) ஒருவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், ஏறாவூர் - மிச்நகர் பொதுச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி வந்தவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள பூட்டப்பட்ட வீட்டிலிருந்து பிணவாடை வந்ததை அறிந்த அயலவர்கள், இது தொடர்பில் பொலிஸாருக்கு பொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, ஸ்தலத்தலத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் சொகோ தடயவியல் பொலிஸார், அங்கு காணப்பட்ட சடலத்தை மீட்டுள்ளதுடன், தீவிர விசாரணை நடத்தியுள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



### 2024 சுற்றுலாப் பயணிகளால்

## 3.17 பில்லியன் டொலர் வருமானம்

நாட்டின் கடந்த 2024ஆம் ஆண்டு சுற்றுலாதுறை வருமானமாக சுமார் 3.17 பில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, சுமார் 53.2 சதவீத வளர்ச்சி என இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் குறிப்பிட்டுள்ளன.

2023ஆம் ஆண்டு சுற்றுலா வருமானமானது 2.0 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

கடந்த வருடம் 20 இலட்சத்து 53, 465 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர். இந்த வருடம் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டத் திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## அம்பாறையில் மழையால் வயல் நிலங்கள் நாசம்

**பாறுக் ஷிஹான்**

அம்பாறை - டீ.எஸ்.சேனாநாயக்க நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு கடந்த செவ்வாய்க்கிழமை (14) திறந்து விடப்பட்ட நிலையில், இடைவிடாத மழை வீழ்ச்சி காரணமாகவும் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் வியாழக்கிழமை(16) காணப்படுவதுடன், அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்து வருவதுடன் சில இடங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது.இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக தாழ் நிலங்கள் வயல் நிலங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சவளக்கடை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட செய்கை பண்ணப்பட்டுள்ள பெரும்போக வேளாண்மை செய்கையில் 2000 ஏக்கருக்கும் அதிகமாகச் செய்கை பண்ணப்பட்டுள்ளன. சவளக்கடை, அன்னமலை,






வேப்பையடி, 5ஆம் கொலனி, போன்ற பல்வேறு பகுதிகளில் காணப்படும் வயல் நிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த மழை வீழ்ச்சி காரணமாக சில குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மை செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது வேளாண்மை 70 நாட்கள் பயிராகக் காணப்படுவதனால், குடலைப்பருவத்தில் இருந்து கதிர் பருவத்திற்கு மாறும் இவ்வேளையில், இவ்வாறு அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் குளங்களில் இருந்து நீர் திறந்து விடப்பட்டுள்ளதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தினால் தாம் பாதிக்கப்பட்டு மீண்டெழ முடியாத நிலையில் இருக்கும் வேளையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அடுத்த வெள்ளமும் தம்மை அதிகம் பாதித்துள்ளதாகவும் விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் நிர்ணயிக்காத நிலையில் தாம் எதிர்பார்த்த விளைச்சல் பெறுவதிலும் சிக்கல் நிலவுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

# சட்டத்தை அமுல்படுத்தாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்

அரசு துறையாக இருந்தாலும் சரி, தனியார்த் துறைகளாக இருந்தாலும் சரி, ஒரு வேலையைச் செய்து கொள்வதற்கு முறைமையொன்று இருக்கும். அதன் செயற்பாடுகள் மெதுவாக நகரும். ஒரு சில சந்தர்ப்பங்களில் வரிசையாக நின்றே ஆகவேண்டும். அரச திணைக்களங்கள், காரியாலயங்களில் வரிசைக்குக் குறைவே இருக்காது. எனினும், இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, இலஞ்சம், ஊழல் இல்லாத நாட்டை கட்டியெழுப்புவோம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறியுள்ளார்.

எனினும், பலரும் வரிசைகளில் நிற்பதற்கும், தங்களுடைய தேவைகளை முறையாகச் செய்து கொள்ளக் காத்திருக்காமல், குறுக்கு வழியில் நாடுகின்றனர். இதனால், பலரும் சிக்கித் தவிக்கின்றனர். நமது நாட்டை பொறுத்தவரையில், இலஞ்சம் வாங்குதல் கொடுத்தலும் மலிந்து கிடக்கின்றன. நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவருக்குப் பிணை வழங்குவதற்காக நீதவானின் பெயரைச் சொல்லி, அந்த நீதவானுக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் சார்ஜன், அவ்விரு சந்தேக நபர்களின் மனைவிகளிடம் இருந்து இலஞ்சம் வாங்கி சிக்கிக் கொண்டார்.

அடி மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையிலும் இலஞ்சத்துக்கு குறைவே இல்லை. சின்ன, சின்ன வேலைகளைச் செய்து கொள்வதற்கு இலஞ்சத்தை எதிர்பார்ப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது. போக்குவரத்தை பொறுத்தவரையில், போக்குவரத்து குற்றங்களுக்கான தண்டப்பணம் அதிகரிக்கப்பட்டதை அடுத்து போக்குவரத்து இலஞ்சம் கூடிவிட்டது. காலாவதியான ஓட்டுநர் உரிமத்தை விடுவிப்பதற்காக ஓட்டுநரிடம் இருந்து 3000 ரூபாய் இலஞ்சம் பெற்ற போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் மத்துகமவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலஞ்சம் என்பது புற்று நோயைப் போல, சமூகம் முழுவதும் பரவியுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பல அரசு நிறுவனங்களுக்கு எதிராக மென்மேலும் அதிகரித்து வருகின்றன. கிராம சேவகர்களுக்கு எதிராக இலஞ்சம் வாங்கும் குற்றச்சாட்டுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இலஞ்சத்துக்குப் பயம், சந்தேகம், பதட்டம், கூச்சம் எதுவும் இல்லை என்பது இலஞ்சத்தின் அளவைப் பார்த்தால் தெளிவாகத் தெரிகிறது. மேலும், அது சமூகத்தில் இயல்பாகப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலை. பணத்தைக் காட்டாமல் ஒன்றும் செய்ய முடியாது என்ற மிக மோசமான நிலையை நாடு எட்டியுள்ளது.

சிலர் சில தந்திரங்களைச் செய்வதன் மூலம் தங்கள் கடமைகளை எளிதாகச் செய்ய ஆசைப்படுகிறார்கள். கடமைகளை நிறைவேற்றுவதற்குக் குறிப்பிட்ட முறையான அமைப்பு இல்லாததே இதற்குக் காரணம். மேலும் அந்த கடமைக்காக எடுக்கும் நேரத்தைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் சில அரசு அலுவலகங்கள் ‘முறைகேடானவர்களால் ‘ நிரம்பி வழிகின்றன. ஆகையால், சட்டத்தை அமுல்படுத்தாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் அதுவே ‘தூய்மையான இலங்கைக்கு’ அடித்தளமாகும் என்பதை வலியுறுத்துகின்றோம்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தங்களை மாற்றிக்கொள்ளாமல் கண்டபடி வாழ்பவர்கள், மற்றவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

செய்த தவறுகளை எவருக்கும் தெரியாதபடி மறைக்கவே, தங்களைப் புத்திசாலிகள்போலக் காட்டிக்கொள்கின்றார்கள்.

பலமற்ற அறிவு குறைந்தவர்கள்தான், தங்களை வெளக்காட்டி பெயரெடுக்க முனைகிறார்கள். ஆனால், சுற்றியிருக்கும் மக்களுக்கு, இவர்களைப் பற்றி எல்லாமே தெரியும்.

உண்மையான உரவத்தைப் பலவீனமானவர்கள் காட்டாமல் விட்டாலும், அவர்கள் நடத்தைகள் காட்டிவிடும். கோடானுகோடி மக்கள் வசிக்கும் பூமியில், யார், எவர் என்று ஆராய்ச்சி செய்வதே வேடிக்கையானது.

தன்னடக்கம் உள்ளவர்கள், எவரையும் மதிப்பார்கள். அன்பை என்றும் நாடுபவர்கள், தேவையற்ற ஆய்வுகளைச் செய்யமாட்டார்கள். இவர்கள் எவராயினும் பிறர் தவறுகளைத் தேடாமல், நன்மைகளை மட்டுமே செய்துவருவார்கள்.

உலகில் எல்லாமே சந்தோசமாக வாழ முடியும். இதற்கு மனப்பக்குவம் வேண்டும்.

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு



மட்டக்களப்பு வாவியில் இராட்சத முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு வாவியில் இராட்சத முதலைகளின் நடமாட்டம் அண்மைய நாட்களாக அதிகரித்து வருவதுடன், கால்நடைகளையும், வேட்டையாடி வருவதாக வாவியை அப் பகுதிகளில் வசித்து வருபவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் கல்லடிப் பாலத்திற்கு அண்மித்த மட்டக்களப்பு அமிர்த கழி தீப்பாலத்திற்கு அருகாமையில் உள்ள வாவியில் பசுமாடு ஒன்றை முதலை பிடித்துச் செல்லும் காட்சி அப்பகுதி மீனவர்கள் உள்ளிட்ட பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முதலைகளின் நடமாட்டத்தால், கால்நடைகள் மட்டுமன்றி, மனிதர்களும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இந்த முதலைகளின் பிரச்சினைக்கு உரியத் தீர்வை, பொறுப்பான துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

– வ.சக்தி

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 03

# பொருளாதார வரலாறு: கோப்பியின் கதை



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை கொடுத்த அதிகப்படியான இலாபம்,பிரித்தானிய கொலனிய நிர்வாகத்திற்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. பிரித்தானியத் தோட்ட நிர்வாகத்தினரின் தேவைகளை நிறைவு செய்வதனூடு இலாபத்தை இன்னும் அதிகரிக்கவும் அதன் வழி இலங்கையை நிர்வகிப்பதற்கான மேலதிக வருமானத்தைப் பெறவும் முடியும் எனவும் கொலனிய நிர்வாகிகள் கருதினர்.

மேலும், மேலதிக இலாபமும் வருமானமும் அவர்களது வாழ்வை இன்னும் செழிப்பாக்கியது. அதற்காக அவர்கள் எதையும் செய்யும் மனநிலையில் இருந்தார்கள். கோப்பித் தோட்டங்களை விரிவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையானது, அரை-தொழில் மயமாக்கப்பட்ட, பெரிய அளவிலான உற்பத்தி அலகுகளான தோட்டங்களில் பணப்பயிர்களைப் பயிரிடுவதன் அடிப்படையில், செழிப்பான ஏற்றுமதி விவசாயத்தின் விரைவான வளர்ச்சியைக் கண்டது. பதினெட்டாம் நூற்றாண்டில், டச்சுக்காரர்கள் கறுவாவின் முறையான உற்பத்திக்காக இலங்கையில் முதல் தோட்டங்களை நிறுவினர். இந்தத் தோட்டங்கள் சிறிய முயற்சிகளாகவும், ஒப்பீட்டளவில் எண்ணிக்கையில் குறைவாகவும் இருந்தன. கறுவா வர்த்தகத்தின் இலாபம் பிரித்தானியர் கையகப்படுத்திய கொஞ்சக் காலத்திலேயே அது முடிவுக்கு வந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் ஏற்கெனவே கோப்பிப் பயிர்செய்கையில் பரிசோதனை செய்தனர், ஆனால் பெரிய அளவிலான கோப்பி தோட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான அவர்களின் முயற்சிகள் பொருத்தமான நிலம் இல்லாததால் தோல்வியடைந்தன. டச்சுக்காரர்கள் இலங்கையின் உள்பகுதியில் உள்ள மேட்டு நிலங்களைக் கட்டுப்படுத்தவில்லை மற்றும் அதிக உயரத்தில் உள்ள நிலங்களுக்கு அணுகல் இருக்கவில்லை. எந்தப் பெரிய அளவிலும் இலாபகரமான கோப்பி உற்பத்திக்கு இது அவசியம்.

பெரிய அளவிலான கோப்பி தோட்டங்களுக்கு நிலம் கிடைப்பதை எளிதாக்க, பிரித்தானிய கொலனித்துவ அரசாங்கம் 1840இல் அரச நிலங்கள் (ஆக்கிரமிப்பு) சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டம் அனைத்து காடு, பற்றை, ஆக்கிரமிக்கப்படாத அல்லது பயிர்செய்யப்படாத நிலங்கள் அனைத்தையும் அரச நிலங்களாக அறிவித்தது. சில வருட இடைவெளியில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட சேனாக்கள் மற்றும் பிற நிலங்கள் அரசமானியம் அல்லது 20 ஆண்டுகளுக்குள் வரி செலுத்தியதற்கான ஆதாரம் அல்லது ‘சன்னாஸ்’ எனப்படும் அரச மானியத்தின் ஆதாரம் இருந்தாலெயன்றி, அவை அரசிற்குச் சொந்தமானதாகக் கருதப்பட்டது. இது ஏராளமான உள்ளூர் விவசாயிகளைப் பாதித்தது. இந்த சட்டம் பயிரிடப்படாத எந்த நிலத்தையும் கையகப்படுத்தவும்,அந்த நிலங்களை ஆளுநர் அங்கீகரிக்கும் எந்த நோக்கத்திற்காகவும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு வழங்க, விற்க அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு அரசிற்கு உரிமை அளித்தது.

மத்திய மற்றும் மேல்நாட்டு மேட்டு நிலங்களின் பரந்த பகுதிகளைக் கையகப்படுத்த இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அவை கண்டி மற்றும் கீழ் நாட்டுக் கிராம மக்களால் காடழிப்புப் பயிர்ச்செய்கை, விறகு சேகரிப்பு மற்றும் மேய்ச்சல் நிலங்களாகத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டன, எனவே, அவை மக்களின் வாழ்வாதாரத்தின் அடிப்படையாகவும் கிராம பொருளாதாரத்தின் அத்தியாவசிய துணைகளாக இருந்தன. இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் ஒரு ஏக்கருக்கு 5 ஷில்லிங் என்ற அளவில் பிரிட்டிஷ் கோப்பி தோட்டக்காரர்களுக்கு அரசால் விற்கப்பட்டன. இது 1844 வரை தொடர்ந்தது. அதற்குள் 260,000 ஏக்கர் அந்நியப்படுத்தப்பட்டது. அதன் மலிவு காரணமாக, கிட்டத்தட்ட இலவசமான இந்த நிலத்தைப் பிறவெளிநாட்டவர்களிடையே அதீத விருப்பு இருந்தது. இதனால் அரசாங்கம் 1844இல் விலையை ஒரு ஏக்கருக்கு 20 வெள்ளியாக உயர்த்தியது. இந்த நேரத்தில் கோப்பி தன்னை ஒரு செழிப்பான பயிராக நிரூபித்தது. ஏக்கருக்கான விலை அதிகரிக்கப்பட்ட போதும், ஆரம்ப முதலீட்டின் இலாபம் மிக அதிகமாக இருந்தமையால் நிலங்கள் வாங்கப்பட்டன. 1850 - 1860களில் கோப்பியின் தொடர்ச்சியான விலை ஏற்றம் இன்னும் அதிகமான நிலங்களை வாங்க வழிவகுத்தது, இதன் விளைவாக 1860களில் ஆண்டுக்கு சராசரியாக 35,000 ஏக்கர் விற்பனையானது.

இவ்வாறு பெறப்பட்ட மலிவு நிலத்தில் வேலை செய்ய, பிரிட்டிஷ் தோட்ட நிர்வாகம் தென்னிந்தியாவில் உள்ள தமிழர் பகுதிகளிலிருந்து மலிவான தொழிலாளர்களை இறக்குமதி செய்தனர். கொலனித்துவ அரசாங்கத்தின் உதவியுடன், தென்னிந்தியாவின் தஞ்சை, திருநெல்வேலி மற்றும் ராமநாடு மாவட்டங்களில் இருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களைத் தோட்டக்காரர்கள் ஏற்பாடு செய்தனர். இவர்கள் தலைமன்னார் வழியாக 25முதல் 100 பேர் கொண்ட குழுக்களாக வந்தனர், ஒவ்வொன்றும் ஒருகங்காணி அல்லது தலைவரின் தலைமையில் ஆட்சேர்ப்பு முகவராக இருந்தனர். 1839இல் சுமார் 3,000 தொழிலாளர்களுடன் தொடங்கி, 1844இல் இது 77,000 ஆக அதிகரித்தது. இரண்டு தசாப்தங்களில் 1840 முதல் 1860 வரை, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆண்டுக்கு சராசரியாக 50,000 பேர் வந்தனர். இந்தியாவுக்கு வந்தவர்களில் பாதி பேர் இந்தியாவுக்குத் திரும்பினர் என்று வைத்துக் கொண்டால், இது 1880ஆம் ஆண்டுக்குள் நிரந்தரமாகக் குடியேறிய புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை 200,000ஆக இருந்தது. இந்த தொழிலாளர்கள் 10க்கு 12 அடி இடைவெளியில், கொட்டகை போன்ற ‘லைன்’அறைகளில் தங்கவைக்கப்பட்டனர். வேலைநாள் கூலியாக நான்கு சதம் வழங்கப்பட்டது.

1885ஆம் ஆண்டளவில் கோப்பி சரிந்த போதிலும், கோப்பி அறிமுகப்படுத்திய ஏற்றுமதி சார்ந்த பொருளாதார அமைப்பும் வெளிநாட்டு வர்த்தகத்தைச் சார்ந்திருப்பதும் இன்று வரை நாட்டின் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்து வருகிறது. கோப்பியின் காலத்தில் (1834-85), கொலனித்துவ அரசாங்கத்தின் செயல்பாடுகள் கோப்பியின் ஏற்றுமதியால் பெறப்பட்ட மேலதிக செல்வங்களுடன் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப்பிணைந்தன. இந்த செல்வங்களும் வசதியான வாழ்வும் தோட்ட எல்லைக்கு வெளியே ஒருபோதும் ஊடுருவவில்லை. அதீத வருமானத்தின் பயன் சாதாரண இலங்கை மக்களைச் சென்று சேரவில்லை. அந்த நேரத்தில் தோட்டங்கள் மற்றும் அதன் சேவைத் துறைகளுக்கான மூலதனப் பொருட்கள் மற்றும் ஐரோப்பியக் குடிமக்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர் படை மற்றும் புதிய நிலையை ஆதரிக்கும் உள்ளூர் வர்க்கங்களின் நுகர்வுத் தேவைகளுக்கான பிறபொருட்கள் ஆகியன இறக்குமதியாகிக் கொண்டிருந்தன. இது நிலப்பிரபுத்துவ எச்சங்கள் மற்றும் பெருந்தோட்டம் மற்றும் கொலனித்துவ இருப்புடன் பிணைக்கப்பட்ட புதிய அடுக்குகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது.

1840களின் முற்பகுதியில் கூட, உள்ளூர் அதிகார வகுப்புகள் தம்மிடையே வலுவான மேற்கத்திய நுகர்வோர் நோக்கு நிலையை உருவாக்கின. இது ஆடம்பர நுகர்வுக்கான இறக்குமதியையும், கொலனியாதிக்க வாதிகளின் நம்பிக்கைக்குரிய சேவகர்களாக தம்மைக் காட்டின் கொள்ளவும் உதவியது. இதற்கான பிரித்தானியர்கள் பயன்படுத்தும் வைன்கள், உணவு வகைகள் இறக்குமதியாகின.

1880களில் கோப்பி வீழ்ச்சியடைந்த நேரத்தில், நாட்டில் இரட்டைப் பொருளாதாரம் உருவானது. ஒன்று மிகவும் வளர்ந்த, ஒழுங்கமைக்கப்பட்ட, வெளிநாட்டுக்கு சொந்தமான, முதலாளித்துவ, பெருந்தோட்டப் பொருளாதாரம். இது மத்திய மலை நாட்டில் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்கிறது. மற்றொன்று பாரம்பரியத்திற்கு கட்டுப்பட்ட, பழைமையான, தன்னிறைவு பெற்ற, வாழ்வாதார விவசாயப் பொருளாதாரம். இது நாட்டின் எஞ்சிய ஈர மற்றும் உலர் மண்டலப் பகுதிகளில் உள்நாட்டு நுகர்வுக்காக உற்பத்தி செய்தது.

இந்த இரண்டும் அற்புதமான முறையில் வேறுபட்டவையாகத் தனித்து இயங்கின. அவற்றுக்கிடையே எந்த தொடர்பும் இல்லை. முந்தையது கொலனித்துவ அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் வளர்ந்தது. பிந்தையது அனாதையாக இருந்தது, தொடர்ந்து தேக்கமடைந்தது. கோப்பி சகாப்தம் அதன் பாரம்பரியமாக விட்டுச் சென்ற இந்த இரட்டை வாதப் பொருளாதார முறை 1948இல் சுதந்திரம் பெறும் வரை இலங்கையின் பொருளாதாரத்தின் மையப் பண்பாகத் தொடர்ந்தது. சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசாங்கங்கள் கூட இந்த இரட்டை வாதத்தின் கட்டமைப்பிற்குள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இலங்கையில் கோப்பி உற்பத்தியின் அனுபவம் தந்த பாடங்களை இலங்கை கற்றுக்கொண்டதா என்ற கேள்வியே எஞ்சுகிறது. ஏனெனில், 1840களின் பிற்பகுதியில் உலகச் சந்தையின் கடுமையான மந்த நிலையால் இலங்கை கோப்பித் தொழில் துறை பாதிக்கப்பட்டது. முதல் அடி 1844இல் விழுந்தது. பிரித்தானியா, தனது கொலனித்துவ மற்றும் ஜாவானிய காபி மீதான அதன் விருப்பக் கட்டுப்பாட்டை நீக்கியது. பிரித்தானிய சந்தையில் புதிய தயாரிப்புகளின் வருகையால், கோப்பியின் விலை குறையத் தொடங்கியது.

1847 - 1849 காலப்பகுதியில் பிரித்தானியாவின் பொருளாதார மந்த நிலை காரணமாகக் கோப்பி விலை மேலும் சரிந்தது. இதனால் அங்கு உயர்தர கோப்பிக்கான தேவை குறைந்தது.

இது இலங்கையின் கோப்பி உற்பத்தியை வெகுவாகப் பாதித்தது. இந்த மந்தநிலை குறைவான இலாபம் ஈட்டிய பலதோட்டங்களை அழித்து விட்டது. போதிய வளங்கள் மற்றும் நல்ல நிர்வாகத்தைக் கொண்ட தோட்டங்கள் மட்டுமே மந்தநிலையிலிருந்து தப்பித்தன. ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் மட்டுமே தங்கியிருப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை இலங்கை உணர்ந்த முதலாவது தருணம் அது.




SLT–MOBITEL 'Cash Bonanza' இடமிருந்து

# பெருமளவு வெகுமதிகள்

கடந்த காலங்களில் மில்லியனயர்களை உருவாக்கியமைக்காக புகழ்பெற்றுள்ள SLT-MOBITELஇன் 'Cash Bonanza' தற்போது மேலும் பல வெகுமதிகளை வழங்க முன்வந்துள்ளது. ரூ.12 மில்லியன் பரிசுத் தொகையிலிருந்து, புதிய மற்றும் ஏற்கெனவே காணப்படும் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு பணப் பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

ரூ.100 எனும் சிறிய தொகையை ரீசார்ஜ் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு, ரீலோட்டை பயன்படுத்தி பிளான் ஒன்றை செயற்படுத்திக் கொள்ளல் அல்லது SLT-MOBITEL மொபைல் இணைப்பை பயன்படுத்தி கட்டணப் பட்டியல் கொடுப்பனவை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இந்த வெற்றியாளர் தெரிவில் உள்வாங்கப்படுவதற்கான தகைமை வழங்கப்படுவதுடன், கவர்ச்சியானவெகுமதிகளை வெல்வதற்கான வாய்ப்பையும் வழங்கும். 2025 ஜனவரி 1ஆம் திகதி முதல் 2025 ஜுன் 30ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் Cash Bonanza இனால், வெற்றியீட்டுவதற்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்படும். இதில், மாபெரும் இறுதிப்பரிசு வெற்றியீட்டும் வாய்ப்பு வழங்கப்படுவதுடன், அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு ரூ.3 மில்லியன் பெறுமதியான பணப் பரிசை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையும், ரூ.1 மில்லியன் பரிசுத் தொகை மாதாந்தம் வெற்றிபெறுவதற்கானவாய்ப்பும் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் விறுவிறுப்பான நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளுடன் முன்னெடுக்கப்படும் 'Cash Bonanza 2025' வெறும் வெகுமதிகள் என்பதற்கு அப்பால் செல்வதாக அமைந்திருக்கும். இந்தத் திட்டம் மக்களுக்கு தொடர்புகளை பேணல், விநோத அம்சங்களில் ஈடுபடல் மற்றும் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்பை வழங்கும். தொலைத்தொடர்பாடல் துறையில், இலங்கையின் மாபெரும் வாடிக்கையாளர் வெகுமதித் திட்டமாக அறியப்படுவதுடன், Cash Bonanza இனால் அனைவரும் வெற்றியாளராக திகழ்வதற்கான வலுவூட்டல் வழங்கப்படுகின்றது.

மேலும், 'Cash Bonanza'மூலம், வாடிக்கையாளர் நம்பிக்கைக்குவெகுமதிகளை பெற்றுக் கொடுப்பதற்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், வாழ்க்கையை மாற்றியமைத்தல் என்பதற்கமைய இணைப்புக்கு அப்பால் பெறுமதியை பெற்றுக் கொடுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. நிகழ்ச்சியின் பிரத்தியேகமான வெகுமதி நிலையினூடாக, தேசிய மட்ட செயற்பாடாக அமைந்திருப்பதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு வாழ்க்கையை மாற்றியமைக்கும் பரிசுகளை வழங்குகின்றது.

வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புகளை அறிந்து கொள்வதற்கு, வாடிக்கையாளர்கள் #151# என்பதை டயல் செய்ய முடியும்.

வெற்றியாளர்களுக்கு 071 2755777 எனும் இலக்கத்தினூடாக மாத்திரம் அறிவித்தல் வழங்கப்படும். சகல அறிவித்தல்களும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தல்களுக்கு உட்பட்டதாக அமைந்திருக்கும்.

உயர் தரம் வாய்ந்த இணைப்புத்தீர்வுகளுடன் வாழ்வுக்கு வலுவூட்டும் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில் இந்த Cash Bonanza திட்டம் அமைந்துள்ளது. மேலும், சர்வதேச மட்டத்தில் புரோட்பான்ட் மற்றும் மொபைல் வலையமைப்பு பரிசோதனை சேவை வழங்குநரானOokla இனால், இலங்கையின் வேகமான 4G மொபைல் வலையமைப்பு சேவை வழங்குநராக SLT-MOBITEL ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

SLT-MOBITEL தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், CashBonanza போன்ற புத்தாக்கமான திட்டங்களினூடாக வாழ்வை மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், உயர் தரம் வாய்ந்த இணைப்புத் தீர்வுகளை வழங்கி, இலங்கையை அடுத்த கட்ட டிஜிட்டல் புரட்சிக்கு கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ளது.

கொமர்ஷல் வங்கி நடத்திய மாணவர்களுக்கான

# திறன் மேம்பாட்டு திட்ட நிகழ்வுகள்

கொமர்ஷல் வங்கியின் 'திரிபல அடுத்த தலைமுறை பாடசாலை தொழில்முயற்சியாளர் சீராக்கல் திட்டத்தின்' கீழ் நடத்தப்பட்ட இரண்டு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டங்களை கம்பஹாவிலுள்ள யசோதரா தேவி பாலிகா வித்தியாலயத்தின் தொழில்முயற்சியாளர் வட்டத்தின் மாணவர்கள் குழு ஒன்று அண்மையில் நிறைவு செய்தது.

இதற்கிணங்க கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) வளவாளர்களால் நடத்தப்பட்ட 'வீடளாவிய மட்டத்தில் வெதுப்பக பொருட்களை உற்பத்தி செய்தல்' மற்றும் 'அழகு கலாசாரப் பயிற்சி' ஆகிய இரண்டு திறன் மேம்பாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இரண்டு நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் கருத்துரை வழங்கிய கொமர்ஷல் வங்கியின் தனிப்பட்ட வங்கியியலின் பிரதிப் பொது முகாமையாளர் திலக்ஷன் ஹெட்டியாராச்சி, நாட்டின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முக்கியப் பங்கினை வகிப்பதாக தெரிவித்தார். இளம் தொழில்முயற்சியாளர்களை ஆதரிப்பதானது புத்தாக்கங்களை வளர்ப்பதற்கும், தேசத்திற்கு வலுவான பொருளாதார அடித்தளத்தை உருவாக்குவதற்கும் முக்கியமானது என்றார்.

கொமர்ஷல் வங்கியின் திரிபல அடுத்த தலைமுறை பாடசாலை தொழில்முயற்சியாளர் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டமானது, பாடசாலை தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தவும், பாடசாலை தொழில் முயற்சியாளர் வட்டங்களிடையே புதிய மாற்றத்திற்கான மனநிலையை வளர்க்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.



கொமர்ஷல் வங்கியானது அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யும் இந்த திட்ட நிகழ்வுகளின் போது மாணவர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும், நிதியியல் கல்வியறிவை மேம்படுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களில் மாணவர்களின் திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்கவும், வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேலும் இந்த முயற்சியில் பாடசாலை மாணவர்களுக்கான வர்த்தக வழிகாட்டுதலும் அடங்குகிறது.




## சடங்குகளின் பிடியில் அம்மணமாகும் பணப்பையை

எறிதல் அவ்வளவு
சுலபமில்லை
சக மனிதர்களை
திருப்திபடுத்த
முனைந்து கழுவேறு உடலை
அழகாகி கட்டியணைத்து
தூங்கி எழுகிறான் அவன்...

மீள் நிரப்ப முடியாத
வாழ்வின்
தருணங்களை விரிப்பாக்கி
தூங்கி எழுகையில்
ஒருவனோ ஒருத்தியோ
வீணாகித்தான்
போகிறார்கள்...

அவன்
அவன் உடலை நேசிக்க
தொடங்கியதில் இருந்து
சுயகாதலில் ஆசனமிட்டு
அரசாட்சி புரிகிறான்...

நான் கண்டடைந்த அவனை
நீங்களும் கண்டடைந்தால்
நிச்சயம் இதை சொல்லியே
விடுங்கள்...

சுய ஆசன அரசாட்சி
என்பது ஒரு
விடுதலையும் தண்டனையும்.

காரையன் கதன்

## காகிதக் கனவு

சும்மா நீட்டி
மேசையில் படர்ந்து கிடந்த
காகிதம்
மழையை பொழிய செய்த
வானத்தை கப்பல் செய்து
கரையேற்றினாய்
இழவு எடுத்த காதலுக்காய்
கவிதை ஒன்றை எழுதினாய்
அடுத்த வாங்கு தேவதைக்கு
அப்பப்ப ஒரு ராக்கெட்
ஒரு பட்டமாக்கத்தான்
உன்னால் முடிவதில்லை
உயரப்பறக்கும்
ஓர்நாள் ஆசை
மரத்தில் சிக்கி சிதையும்
அற்புத கணங்கள்
எட்டாத தொலைவு எனக்கும்
உனக்கும்.



–லலித்தா–




## மரங்கள்...



நிலத்தின் தன்மை தெரிந்து....
நீட்டி நிமிர்ந்து வளர்ந்தேன்
கத்தி கொண்டு--
தலையை வெட்டினாய்...
போதாக் குறைக்கு..
என் உடல் பாகங்களை
வெட்டிச் சரித்தாய்..
உன் வெறி தீர்ந்ததா?
சாகப் போகும் நேரம்
பார்த்து..
உரமிட்டு
உயிர்கொடுக்கிறாய்
மனிதா?
நீ என்னை சாகவும்
விடமாட்டாய்
வாழ்வும் விடவில்லை...
மலர்தரும் எனக்கோ--
நிறைந்த பூகம்பத்தைத்
தருகிறாய்!
இத்தனை கொலைவெறி
ஏனோ!
மனிதரை வாழவைக்க
நினைத்தது
எமக்கெல்லாம் சாபமா?
உணரமாட்டாயோ....

க.யோகானந்தன்



## அனைத்தும் கானல்தானா?



ஆழ்கடல் அது...
அதிசயங்களால் நிறைந்து.
ஆராதித்த பின்னே
தான் அங்கும்
வியக்கும் விபரீதம்.

"தோற்றங்கள் எல்லாம்
வெறும் மாயை"
என ஒரு பொங்கி
எழுகைக்குப் பின்தானே
தெரிகிறது.

ஒரு வீழ்ச்சிக்குப்
பின் தானே புரிகிறது.
ஒரு சரிவும் ஒரு
இழப்பும் தானே
இறுதியில் எல்லாம்
சொல்கிறது,
பரவாயில்லை விடு.

ஒரு சோளக்காட்டு
பொம்மையை
விட சுடுபட்டு வலி
கண்ட நீ நிறைவு தான்.

ஆதிரையாள்– வசுநிர்மல்





அமெரிக்கா

பிரபல ஆராய்ச்சி நிறுவனம்

# மூடப்படுகிறது

அதானி குழுமத்தின் மீது தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்த அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதாக, அதன் நிறுவனர் நேட் ஆண்டர்சன் அறிவித்துள்ளார்.

இது குறித்து நேட் ஆண்டர்சன் வெளியிட்டுள்ள பதிவில், "ஹிண்டன்பர்க் நிறுவனத்தை மூடுவதற்கான காரணம் எதுவுமில்லை. மிரட்டல், உடல்நலப் பாதிப்புகள் போன்ற எதுவுமில்லை. கடந்த ஆண்டு குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் எங்கள் குழுவுடன் விவாதித்து இந்த முடிவை எடுத்துள்ளேன். இதனால், ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனத்தை நிரந்தரமாக மூட முடிவுசெய்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.




2023ஆம் ஆண்டில், அதானி குழுமத்திற்கு எதிரான அதன் அறிக்கையில், அந்நிறுவனம் பல பில்லியன் டொலர் இழப்பை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் பிரபல முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான ஹிண்டன்பர்க், உலகின் பெரும் நிறுவனங்களில் நடைபெறும் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கைகளை வெளியிடுவது வழக்கம்.

இதன் அறிக்கைகள், மோசடிகளை அம்பலப்படுத்துவதிலும், முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக நம்பப்படுகிறது.




அமெரிக்கா

மெட்டா நிறுவனத்தில் இருந்து

## 3,600 ஊழியர்கள் பணிநீக்கம்

மெட்டா நிறுவனத்தின் 5 சதவீதம் ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படவுள்ளதாக, அதன் தலைவர் மார்க் ஜூக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை தலைமையிடமாக கொண்டு பிரபல தொழில்நுட்ப நிறுவனமாக 'மெட்டா' இயங்குகிறது. பேஸ்புக், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் போன்ற பிரபல சமூக வலைத்தளங்களை இது நிர்வகித்து வருகிறது. உலகம் முழுவதும் மெட்டா நிறுவனத்தில் 72 ஆயிரம் பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்நிலையில், மெட்டா நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படவுள்ளதாக அதன் தலைவர் மார்க் ஜூக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

நிறுவனத்தை சீரமைக்கும் வகையில் 5 சதவீதம் அதாவது 3,600 ஊழியர்களை நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயாராகி வருகிறது.

இவர்கள், அடுத்த மாதம் 10ஆம் திகதிக்குள் அவர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பதிலாக செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவில் உள்ள

## ரஷ்யா தூதரகம் மூடப்படும் அபாயம்

அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஆஸ்கர் ஜென்கின்ஸ் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டால், அவுஸ்திரேலியாவில் உள்ள ரஷ்யா தூதரகம் மூடப்பட்டு, அங்குள்ள அதிகாரிகள் வெளியேற்றப்படுவர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேட்டோ அமைப்புடன் இணைவதாக கூறிய உக்ரைன் மீது ரஷ்யா இராணுவம் போர் தாக்குதலை 2022ஆம் ஆண்டு தொடங்கியது. சுமார் 3 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில், ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்து வருகின்றனர். இருப்பினும் போர் தீவிரம் குறைந்தபாடில்லை.

அவுஸ்திரேலியாவை சேர்ந்தவர் ஆஸ்கர் ஜென்கின்ஸ் (வயது 32), உக்ரைன் இராணுவத்தில் இணைந்து அவர்களுக்கு ஆதரவாக அங்கு போராடி வந்தார். போரில் ரஷ்யா இராணுவத்தினர் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். விசாரணையின்போது ஆஸ்கர் ஜென்கின்ஸ் இறந்ததாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கான ரஷ்யா தூதருக்கு அவுஸ்திரேலியா பிரதமர் அலுவலகம் சம்மன் அனுப்பியது. நேரில் ஆஜரான ரஷ்ய தூதரிடம், பிரதமர் ஆண்டனி அல்பானிஸ் முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது ஆஸ்கர் ஜென்கின்சின் நிலவரம் குறித்து ஆதாரங்களுடன் கேட்கப்பட்டது. அவர் உயிரிழந்திருப்பது உறுதி செய்யப்பட்டால் ரஷ்யா தூதரகம் மூடப்பட்டு அதிகாரிகள் வெளியேற்றப்படுவர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



தமிழகம்

ஜல்லிக்கட்டுப் போட்டியில் உயிரிழந்த இளைஞனின்

## சடலத்தை வாங்க மறுக்கும் உறவினர்கள்

மதுரை, அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டியில் உயிரிழந்த இளைஞனின் சடலத்தை வாங்க மறுத்த உறவினர்கள், போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

மதுரை, அவனியாபுரம் ஜல்லிக்கட்டுப் போட்டி, செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.இதில், மதுரை விளாங்குடியைச் சேர்ந்த நவீன்குமார் (23) என்ற இளைஞன் மாடுபிடி வீரராக களம் இறங்கினார்.

போட்டியில் காளை முட்டியதில் அவர் பலத்த காயமடைந்து மதுரை அரசு ராஜாஜி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால், சிகிச்சை பலனின்றி, புதன்கிழமை (15) உயிரிழந்தார்..

சடலத்தை, பிரேதப் பரிசோதனைக்கு பின்னர்,புதன்கிழமை (15) உறவினர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். இதன்போது, ஜல்லிக்கட்டில் உயிரிழந்த குறித்த இளைஞனுக்கு அரசு நிவாரணம் வழங்கக் கோரி, அவரது உறவினர்கள் சடலத்தை வாங்க மறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால், ஜல்லிக்கட்டுப் போட்டிக்கு நெருக்கடியையும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினையையும் ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது.



அதனால், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், பொலிஸார் உயிரிழந்த இளைஞனின் உறவினர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க, முதல்வர் ஸ்டாலின், புதன்கிழமை (15) உத்தரவிட்டுள்ளார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாமை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (16) நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை லியான்ட்ரோ ட்ரொஸார்ட் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை சண் ஹெயுங்-மின் பெற்றார்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற அஸ்தன் வில்லாவுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் தோற்றது. வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஒலி வட்கின்ஸ் பெற்றிருந்தார்.


இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற கிறிஸ்டல் பலஸுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் லிஸ்டர் சிற்றி தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 47 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 43 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 41 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 38 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. இதில் லிவர்பூல் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

## நொர்கியா விலகல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து முதுகுப் பகுதி உபாதை காரணமாக தென்னாபிரிக்காவின் வேகப்பந்துவீச்சாளர் அன்றிச் நொர்கியா விலகியுள்ளார்.

இந்நிலையில் அடிவயிற்றுப் பகுதி உபாதையிலிருந்து குணமடைந்த இன்னொரு வேகப்பந்துவீச்சாளரான ஜெரால்ட் கொயட்ஸி, நொர்கியாவை தென்னாபிரிக்கக் குழாமில் பிரதியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.





இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில் இன்டர் ￼ பொலொக்னா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் வியாழக்கிழமை (16) நடைபெற்ற பொலொக்னாவுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் சமப்படுத்தியது.

இன்டர் சார்பாக டென்ஸில் டம்ப்பிறைஸ், லொட்டரோ மார்டினெஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பொலொக்னா சார்பாக சன்டியாகோ கஸ்ட்ர், எமில் ஹொல்ம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 47 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி உள்ளது. 44 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டரும், 43 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 36 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோவும் காணப்படுகின்றன. இதில் இன்டர் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

பாகிஸ்தான் எதிர் மேற்கிந்தியத் தீவுகள்:

## இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது முல்தானில் இன்று காலை 11 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இத்தொடருக்கான ஆடுகளங்கள் சுழற்பந்துவீச்சுக்கே சாதகமாக இருக்குமெனக் கருதப்படுகின்ற நிலையில் சஜித் கான், நொமன் அலி, அப்ரார் அஹ்மட் ஆகியோரும் குராம் ஷஷாட் மாத்திரம் வேகப்பந்துவீச்சாளராக களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இமாம்-உல்-ஹக்குடன் முஹமட் ஹுரைரா அறிமுகத்தை மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகளில் குடகேஷ் மோட்டியும், கெவின் சின்கிளேயரும் சுழற்பந்துவீச்சைக் கவனிக்க கேமார் றோச்சும், ஜேடன் சியல்ஸும் களமிறங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 17, ஜனவரி 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.